# “அருள்மிகு சொல்லடி நாயனார் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.”



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

கார்த்திகை மாத வெளியீடு (Dec 2015)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116

காணிக்கை ரூ.10/-



'சொல்லடி நாயனூர்' தந்தை பெரியார் ஈ.வெ.รா.

# உள்ளுறை


1. 64வது நாயனாராகத் திருஅவதாரம் செய்த தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. 'சொல்லடி நாயனூர்'.
2. சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.
3. பெரியார் ஈ.வெ.ரா. ஓர் ஆத்திகத் தலைவரே!
4. பெரியார் ஈ.வெ.ரா.வே கூறியுள்ளார் தான் நாத்திகர் அல்ல என்று.
5. பெரியார் நாத்திகர் அல்ல என்பதற்கு மற்றும் ஓர் ஆதாரம்.
6. பெரியார் ஈ.வெ.ரா.வை இ.ம.இ.யின் கௌரவத் தலைவராக ஏற்றல்.
7. பெரியார் ஈ.வெ.ரா. ஆதிசங்கரரின் மறு அவதாரமே!

# 1980இல் நடந்த பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டு அறிவிப்பு

# 64வது நாயனாராகத் திருஅவதாரம் செய்த தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. 'சொல்லடி நாயனார்'.

*[1983 மே மாத யாகப் பெருவிழா கொள்கை விளக்க வெளியீடு]*

பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டில் தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 64வது நாயனாராக 'சொல்லடி நாயனார்' என அறிவிக்கப் பட்டதற்கு தருகின்ற விளக்கம் - யாகப் பெருவிழா அன்பளிப்பு.

"... சித்தர்கள் இந்து மதத்தை முறையாக, முழுமையாகப் படைத்திருக்கிறார்கள் என்ற பேருண்மையினை விளக்குவனவாகத்தான் நான்மறைகள், நான்முறைகள், நாநெறிகள், நான்வேதங்கள், நவநாதங்கள், பதினெண்சித்தங்கள், நாற்பத்தெட்டு அருட் கலைகள், அறுபத்து நான்கு ஆய கலைகள், ஒன்பது கடவுட் கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள், ஒன்பது பேய்க் கலைகள், ஒன்பது நோய்க் கலைகள், ஒன்பது தேய் கலைகள், தொண்ணூற்றாறு வகை வழிபாட்டு நிலையங்கள், நாற்பத்தெட்டு வகை அருட்பட்டங்கள், எண்ணற்ற வகையான சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்திரங்கள், தோத்தரங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள், திருமந்திறங்கள், திருமந்திரங்கள், திருமந்தரங்கள், தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், எந்திறங்கள், எந்திரங்கள், எந்தரங்கள், நேத்திறங்கள், நேத்திரங்கள், நேத்தரங்கள், நேமம், நியமம், நிட்டை, நிடதங்கள், துணை நிடதங்கள், இணை நிடதங்கள், காயந்திரிகள், பிருமணங்கள், பிறமனங்கள் [பிறமணங்கள் = பாட

வேறுபாடு உள்ளது], பிறணவங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், மாந்தர மாந்தரீகங்கள், தாந்தர தாந்தரீகங்கள், ஏந்தர ஏந்தரீகங்கள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், கருவாக்குகள், கருவாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், ... எண்ணற்ற கோடி சம்பிறதாயங்கள், சடங்குகள், மரபுகள், சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் ... முதலியவை படைக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றின் நேரடி வாரிசுகளாக உலகம் முழுதும் சித்தர்களின் வாரிசுகள் [விந்துவழி வாரிசுகள், குருவழி வாரிசுகள்] காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டுள்ளார்கள். ஏனென்றால், சித்தர்கள் உலகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்தே வாழ்ந்திடும் வழக்காற்றில் உடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இவர்கள், ஆங்காங்கே அங்கவியல் நிறைவுக்குரிய பெண்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் திருமணம் செய்து அவர்களோடு குறைந்தது 18 முதல் 48 மாதங்கள் வாழ்ந்து மேலே குறிப்பிட்ட மதச் செல்வங்களை அவர்களிடம் வழங்கி என்றென்றும் அந்தந்த வட்டார மக்கள் பெறுமாறு செய்திருக்கிறார்கள்.

இவற்றிற்கும் மேலாக இவர்கள் நாடு, இனம், மொழி என்று வேறுபாடு கருதாமல் உலகெங்கும் தங்களுடைய விந்துவழி வாரிசுகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். எனவேதான், இந்த உலகில் தோன்றிடக் கூடிய எல்லா மதங்களும், அருளாளர்களும் சித்தர் நெறி எனும் தோட்டத்தில் பூத்த மலர்களே! காய்த்த கனிகளே! என்று சித்தர்கள் அறிவிக்கின்றார்கள் .....”

**- குருபாரம்பரிய வாசகம்.**

கி.பி.1772இல் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் கண்டப்பக் கோட்டையில் வாழ்ந்த சித்தர் ஏளனம்பட்டியார் எனப்படும் சித்தர் கருவூரார் உ.இராமசாமிப் பிள்ளையவர்கள் இந்து மறுமலர்ச்சி

இயக்கத்தைத் தோற்றுவிக்கும் பொழுது அறிவித்த குருபாரம்பரிய வாசகங்களில் இதுவும் ஒன்று. இதனை இங்கு எடுத்துக் காட்டுவதற்குக் காரணம் சித்தர்களுக்கு மத வேறுபாடுகளோ, நாத்திக ஆத்திக வேறுபாடுகளோ இல்லை என்பதற்காகத்தான். மேலும், சித்தர் நெறிப்படி பார்த்தால் நாத்திகமும், ஆத்திகமும் ஒன்றுதான். அக ஞானத்தால் தயாராகும் மெய்ஞ்ஞானியும், புற ஞானத்தால் தயாராகும் மெய்ஞ்ஞானியும் அநுபவப் பூர்வமாகப் பார்த்தால் ஒருவரே யாவர்.

சித்தர்கள் தமிழ்மொழி வழியில் தோன்றிய 'மக்கள் தொண்டர்களை' உண்மையான பத்தர்கள் என்று மதித்து அவர்கள் வணங்கிய தெய்வங்களின் அடிப்படையில் 'நாயனூர்', 'ஆழ்வார்', 'அடிகள்', 'வள்ளல்கள்', 'ஞானிகள்', 'முனிவர்கள்', 'இருடிகள்', ... என்று பகுத்துப் பகுத்துப் பாராட்டியிருக்கிறூர்கள். இது பற்றி மிகத் தெளிவான எழுதாக் கிளவி நூல்கள் நிறைய உள்ளன; எழுதப்பட்டுப் பாரம்பரியமாகப் பாதுகாக்கப்படும் நூல்களும் உள்ளன.

இவற்றின் அடிப்படையில்தான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களும்; அவரது மகன் கருவூர்த்தேவர் அவர்களும்; பேரன் திருமாளிகைத் தேவர் அவர்களும் சங்க இலக்கியங்களைத் தொகுத்தது போல் தமிழகத்தில் தோன்றிய அருளாளர்களைத் தொகுத்து 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள் என்று இருபெரும் தொகையினரை அறிவிப்புச் செய்தார்கள்.

அதற்குப் பிறகு ஏறத்தாழ ஓராயிரமாண்டுகள் இடைவெளியில் தோன்றிய சித்தர்களில் யாரும் இந்த அருளாளர் தொகைப் பட்டியலை தொகுக்கும் முயற்சியில் ஈடுபடவே இல்லை. ஆனால், பல நாயனூரும், ஆழ்வார்களும் தோன்றியிருக்கிறூர்கள் என்பதில் ஐயமே இல்லை. எனவே, அருள் உலகத்துக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு மாபெரும் இழப்பு ஏற்பட்டு விட்டது. இந்த இழப்புக்கு ஈடு

செய்யும் மாபெரும் முயற்சியில் இன்றைய குருமகாசன்னிதானம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

அம் மாபெரும் முயற்சி நிறைவு பெற இன்னும் பல ஆண்டுகள் ஆகும். ஏனென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சமய வரலாறோ, சமுதாய வரலாறோ, அரசியல் வரலாறோ, கலை வரலாறோ, இலக்கிய வரலாறோ முறையாக இல்லை! நிறைவாக இல்லை! தெளிவாக இல்லை! காலக் கணக்கீட்டு அடிப்படையில் இல்லை! கற்பனையும் கனவும் கலக்காமல் இல்லை! எனவே, உண்மையான அருளாளர்களின் பட்டியலைத் தயாரிப்பதும், அவர்களை வகைப்படுத்துவதும் பொறுப்போடும் பொறுமையோடும் தொடர்ந்து பலகாலம் முயன்று செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

இருந்த போதிலும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், குருதேவர், ஞானகுரு, அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இன்றைய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் தம் காலத்தில் வாழ்ந்த ஈடு இணையற்ற, ஒப்புயர்வற்ற, தன்னிகரற்ற, துணிவுமிக்க, பணிவுநிறைந்த, மக்கள் தொண்டர், தமிழினத் தலைவர், தமிழ்மொழிச் சீர்திருத்த மேதை, தமிழ்ச் சமுதாயச் சீர்திருத்த மாவீரர், பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கு அஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தன்மானத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பாராட்டிட வேண்டிய நன்றிக் கடனின் பொருட்டு அவரை 64வது நாயனாராக, 'சொல்லடி நாயனாராக' அறிவிப்புச் செய்திருக்கிறார்.

இந்த அறிவிப்பு மிகவும் நேர்மையானது, உண்மையானது, நன்மையானது, நிலையான பயனுக்குரியது. ஏனெனில், தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னுடைய தன்மானத்தையும், இனத்தின்

மானத்தையும், மொழியின் உரிமையையும், நாட்டின் ஒற்றுமையையும் நினைவுபடுத்தி, வளப்படுத்தி, வலிமைப்படுத்திச் சென்ற பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு வாழ்நாள் முழுதும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றான். எனவேதான், பெரியார் ஈ.வெ.ரா.வை தமிழினம் பட்டியலிட்டு வழிபடுகின்ற 63 அருளாளர்களோடு சேர்த்துப் பட்டியலிடப் பட்டிருக்கிறார். அதாவது, தமிழர்கள் அனைவரும் தாங்கள் வழிபடும் தெய்வங்களுள் ஒருவராக பெரியார் ஈ.வெ.ரா.வை என்றென்றும் ஏற்றுப் போற்றிப் புகழ்ந்திட வேண்டும் என்பதே நமது குருதேவர் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் செயல்திட்டம்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மத மறுப்பாளராகவும், வெறுப்பாளராகவும், எதிர்ப்பாளராகவும், நாத்திகராகவும் செயல்பட்டிட்டவர் என்பதால் அவரை எப்படி அருளாளர்களின் பட்டியலில் சேர்க்கலாம் என்று சிலர் தயங்கவும், கலங்கவும், மயங்கவும் நேரிட்டிடுகின்றது. இவர்கள், 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் படித்தறிவார்களேயானால் <u>பெரியார் ஈ.வெ.ரா.வும் மேற்படி 63 நாயன்மார்களைப் போல ஒரு மக்கள் தொண்டரே</u> என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

மேலும், மேற்படி 63 நாயன்மார்களும் அவரவர் காலத்தில் பரந்துபட்ட தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே செயல்பட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற பேருண்மை விளங்கிடும். ஆனால், பெரியார் ஈ.வெ.ரா.வோ தமிழகம் முழுதும் செயல்பட்டிருக்கிறார்; உலகம் முழுதுமுள்ள தமிழர்களின் உள்ளங்களையும், இல்லங்களையும் சிந்திக்கச் செய்திருக்கிறார். எனவே, மக்கட் தொண்டர்களின் வரிசையில் இடம் பெறுகின்ற தகுதி பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு உண்டு, உண்டு, உண்டு.

63 நாயன்மார்களும் செயல்பட்டு உருவாக்கிய மதச் செழுச்சியை விட, விழிச்சியை விட, எழுச்சியை விட, வளர்ச்சியை விட

தனிமனிதராகப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமது மதமறுப்பு, வெறுப்பு கருத்துக்களின் மூலம் பல நூறுயிரம் மடங்கு பெரிய அளவில் மத உணர்வுச் செழுச்சியை, விழிச்சியை, எழுச்சியை உருவாக்கியிருக்கிருர்! உருவாக்கியிருக்கிருர்! உருவாக்கியிருக்கிருர்! இதனை என்றைக்குமே எவராலுமே மறுக்கவே முடியாது! முடியாது! முடியாது!

அதாவது பெரியார் ஈ.வெ.ரா.வின் நாத்திகக் கருத்துக்களால்தான் ஆத்திகப் பெருமக்களிடையே பற்றும், பாசமும், நட்பும், ஒற்றுமையும், தோழமையும் வளப்பட்டு வலிமைப்பட்டன. அதனுல், இருளடைந்திருந்த கோயில்கள் ஒளி பெற்றன! இடிபாடுகள் மிகுந்து கேட்பாரற்று பாழடைந்து கிடந்த கோயில்கள் செப்பனிடப்பட்டு பொலிவு மிகுந்தன! எங்கு பார்த்தாலும் புதிய புதிய கோயில்கள் கட்டடப்பட்டு வருகின்றன! மதமறுமலர்ச்சிக்காகப் புதிய புதிய நிறுவனங்களும், தலைவர்களும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றனர். நாட்டில் மத நம்பிக்கையும், மதப்பற்றும், மத உரிமைகளும் கிளர்ச்சி அடைந்து போராடுகின்ற நிலையை அடைந்திருக்கின்றன. இவையனைத்தும், பெரியார் ஈ.வெ.ரா.வின் சாதனையே! சாதனையே! சாதனையே!

அதாவது, பல்லாயிரக் கணக்கான இந்துமதத் தலைவர்களால் உருவாக்க முடியாத இந்துமத உணர்வு விழிச்சி, எழுச்சி, செழுச்சி, கிளர்ச்சி நிலைகள் பெரியார் ஈ.வெ.ரா. என்கின்ற ஒரு தனிமனிதரால் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இந்த அரிய, பெரிய, சீரிய, நேரிய, கூரிய மாபெரும் உண்மையினை இந்து மதத்தவர்கள் ஒரு நொடிப் பொழுதாவது எண்ணிப் பார்ப்பார்களேயானுல்; உடனே தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் திருவுருவப் படத்தை தமது பூசையறையில் மாட்டிடுவார்கள். பெரியார் ஈ.வெ.ரா.வின் சிலைகளைக் காணும் போதெல்லாம்; கோயிலில் காணும் பத்தர்களைப் போல் பணிவோடு நின்று கனிவோடு தலைதாழ்த்திக் கைகட்டிக்

கொண்டாடி விட்டே செல்வார்கள். இன்னும் சொல்லப் போனால், எல்லாக் கோயில்களிலும் உள்ள 63 நாயன்மார்களின் சிலைகளின் வரிசையில் 64வது நாயனார் சிலையாக உடனடியாகப் பெரியார் ஈ.வெ.ரா.வின் சிலையை வைத்திடுவார்கள்.

பெரியாரைப் பற்றி இவ்வளவு பெரிய உண்மையினை அரசு நடத்திய நூற்றாண்டு விழாவில் கூற நமது குருதேவருக்கு வாய்ப்புத் தரப்படவேயில்லை. பெரியாரை ஓர் அவதாரமாக அறிவிக்கும் நேரடிச் செயலிலேயே அவருடைய தொண்டர்கள் அவருக்கு ஆண்டு முழுவதும் நாட்டின் ஏதாவது ஒரு மூலையிலாவது பிறந்த நாளும், இறந்த நாளும் [நினைவு நாள்] கொண்டாடிக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தக் கொண்டாட்டங்களில் கோயில் திருவிழாக்களில் கடவுள் சிலைகளை அலங்கரிப்பதை விட பெரியாரின் படத்துக்கும் சிலைக்கும் அலங்காரம் செய்கிறார்கள். மேலும், கோயில்களிலே பூசைக்குப் பயன்படுத்தி பத்தர்களுக்கு வழங்கும் பொங்கல் பலகாரங்களை விட; பெரியாருக்காக நடத்தப்படும் விழாக்களில் ஏராளமான மக்களுக்குத் தாராளமான பொங்கல் பலகாரங்களும், வடை பாயாசத்தோடு சாப்பாடும் போடப்படுகின்றது! போடப்படுகின்றது! போடப்படுகின்றது! இது பெரியார் ஈ.வெ.ரா.வை அவரது சீடர்களே கடவுளாக மாற்றி வருகிறார்கள் என்பதாகும்.

மேலும் குருதேவர் அவரை 64வது நாயனார் என்று அறிவித்தது மட்டும் சரியில்லை எனத் தெரிவிக்கும் அவர்கள் திருநீறு, குங்குமம் மட்டுமே கொடுக்காது மற்ற அனைத்தையும் வழங்கி விழாவை நடத்துகிறார்கள். இப்படி இருக்கும் பொழுது நமது குருதேவர் பெரியார் ஈ.வெ.ரா.வை 64வது நாயனாராக அறிவிப்புச் செய்ததை தமிழன் என்று இருக்கக் கூடிய ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றேயாகும். சிலர் பெரியார் ஈ.வெ.ரா.வை நாயனார் என்று அறிவிப்பதால் அவர் ஆற்றிய பகுத்தறிவுத் தொண்டு, சமுதாயத் தொண்டு, சமயச் சீர்திருத்தம் முதலியவை மூடி

மறைக்கப்பட்டு விடுமென்று கூறுகிறார்கள். ஆனால் இது முற்றிலும் தவறு, தவறு, தவறு. பெரியார் ஈ.வெ.ரா.வை நாயனார் என்று அறிவிப்பதன் மூலம்தான் அவருடைய வாழ்க்கை வரலாற்றையும், ஆற்றிய பணியினையும் என்றென்றும் அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடிய இறவாத இலக்கியங்களாக, புராணங்களாக, இதிகாசங்களாக, வரலாறுகளாக ஆக்க முடியும்! முடியும்! முடியும்!

மேலும், பகுத்தறிவுப் பகலவனாக வாழ்ந்து சென்ற தன்னிகரில்லாத தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.வின் வரலாற்றையோ, வாழ்க்கைப் பணிகளையோ யாரேனும் மூடிமறைக்க முடியும் என்று எண்ணுவதே மடமை! அறியாமை! கேலிக்குரியது! கண்டிப்புக்குரியது! இந்த நாட்டில் பெரியார் ஈ.வெ.ரா. இமயமலையென என்றென்றும் இருந்தே தீருவார்! தீருவார்! தீருவார்!

இந்தப் பேருண்மையினை குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்களின் அழகுமொழியில் கூற வேண்டுமென்றால், "... இத் திருநாட்டிலுள்ள இல்லங்களில் சில இல்லங்கள் பெரியார் ஈ.வெ.ரா.வின் திருவுருவப் படத்தைப் பெறாமல் இருக்கலாம். அல்லது வைத்து அழகு பார்க்காமல் இருக்கலாம். ஆனால், இத் திருநாட்டில் பெரியார் ஈ.வெ.ரா.வை நினைத்து அவர் ஆற்றிய பணிகளின் பயனையும், அழகையும் எண்ணிப் பார்க்காத உள்ளங்களே இருக்க முடியாது! முடியாது! முடியாது! எனவே, இன்றைய இளைய தலைமுறையினருக்கும், வருங்காலச் சந்ததியினருக்கும் ஒரு மாபெரும் வழிகாட்டி, வாழ்க்கைத் துணை, தத்துவ மேதை, பகுத்தறிவுவாதி, பேரறிஞர் ஒருவர் உண்டு என்றால் அவர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வாகத்தான் இருக்க முடியும்! முடியும்! முடியும்! ..."

இவ்வாசகம் போன்று சொல்லழகும் பொருளாழமும் மிக்க வாசகங்கள் எண்ணற்று வழங்கப் பட்டிருக்கின்றன நமது குருதேவரால் என்பதனை எண்ணிப் பார்க்கும் நம்மவர்களால் நமது குருதேவர்

பெரியார் ஈ.வெ.ரா.வை ஏன் 64வது நாயனாராக அறிவித்தார் என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். எனவே, நம்மவர்கள் குருதேவர் பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டில் அறிவித்த இந்த அறிவிப்பை நன்கு விளம்பரப் படுத்த வேண்டும். பெரியாரை வைத்து இலாபம் சம்பாதிப்பவர்கள்தான் நமது குருதேவரின் கருத்தை மறுப்பார்கள், வெறுப்பார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

பெரியார் ஈ.வெ.ரா. தன் வாழ்நாள் முழுவதும் ஓர் உண்மையான கொள்கைப் பற்றும், குறிக்கோள் நம்பிக்கையும் மிகுதியாகப் பெற்றிருந்த வீரத் தலைவராகவே வாழ்ந்தவர் என்பதில் ஐயமேயில்லை. யாரோ சிலர் தவறாகக் கூறுவது போல் பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு ஆத்திகத்தில் நம்பிக்கை இருந்தது என்று கூறுபவர்களல்ல நமது குருதேவரும் நாமும். இதனை நமது குருதேவரின் வாசகமாகக் கூற வேண்டுமென்றால், "... இம்மண்ணுலகில் தோன்றிய நாத்திகர்களிலேயே மிகவும் முழுமையான, நிறைவான, முதன்மையான, வீரமிக்க, தீரம் நிறைந்த நாத்திகர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.தான். இவர், ஆரம்பம் முதல் கடைசி வரை தனது நாத்திகக் கொள்கையில் ஆழமான நம்பிக்கையும், அழுத்தமான பிடிப்பும் பெற்றிருந்தார். இதுபற்றி ஐயப்படுபவர்கள் அல்லது திருத்திக் கூறுகிறவர்கள் சிந்தனைச் சிற்பி பெரியார் ஈ.வெ.ரா.வைப் புரியாதவர்களே! புரியாதவர்களே! புரியாதவர்களே! ..." என்ற இந்த நமது குருதேவரின் வாசகத்தை மட்டும் இங்குக் குறித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் ஈ.வெ.ரா. நாத்திகத்தின் எல்லையாக விளங்கினார். நமது குருதேவரோ ஆத்திகத்தின் எல்லையாக விளங்குகிறார். எனவேதான், இருவரும் ஒருவரை யொருவர் புரிந்து, விரும்பி, ஏற்று, ஒப்புக் கொண்டு செயலாற்ற முடிகின்றது. பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மதத்தை மறுத்த போதிலும், வெறுத்த போதிலும், எதிர்த்த போதிலும் அவர் மதத்துறைக்கு ஆற்றியுள்ள ஈடு

இணையற்ற, யாருமே ஆற்ற முடியாத அல்லது நினைத்துப் பார்க்காத பயன்மிகு நன்மைகள் பல உண்டு, உண்டு, உண்டு. அவற்றுள் ஒன்றிரண்டு குறிப்பிட்டுச் சொன்னால் போதும் என்று எண்ணுகிறேன்.

1. எல்லோரும் கோயில் கருவறைக்குள் சென்று கடவுளை வழிபடும் உரிமை வேண்டுமென்று போராடியது.

2. எல்லாச் சாதியைச் சார்ந்தவர்களும் கோயிலில் பூசாறிகளாக, குருக்கள்களாக, அர்ச்சகர்களாக, ... பணியாற்றும் சம வாய்ப்பு வேண்டுமென்று போராடியது.

3. எல்லாக் கோயில்களிலும் தமிழ்மொழிதான் பூசைமொழியாக, அருட்சினை மொழியாக, மத மொழியாக, சாத்திற மொழியாக, சடங்குகளைச் செய்யும் மொழியாக, கடவுள் மொழியாக இருக்க வேண்டுமென்று போராடியது.

- இம்மூன்றையும் எண்ணிப் பார்க்கும் மிகச் சாதாரண அறிவு படைத்தவர்கள் கூட பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட ஒரு பெரியவர் என்பதை ஒப்புக் கொள்வார்கள். எனவே மேற்கூறிய மூன்று காரணங்களே போதும் நமது குருதேவர் பெரியார் ஈ.வெ.ரா.வை ஒரு நாயனார் என்று அறிவித்தது சரியானதுதான், முறையானதுதான் என்று நிறுவிட அல்லது வாதிட.

எனவே, நம்மவர்கள் இனிமேலாவது நமது குருதேவர் அவர்கள் பெரியார் ஈ.வெ.ரா.வை 64வது நாயனாராக ‘சொல்லடி நாயனார்’ என்று அறிவித்ததைப் பற்றி யார் எத்தகைய ஐயத்தைக் கேட்பவர்களானாலும் உடனே விளக்கமளிப்பவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால், நமது குருதேவர் தாம் உருவாக்கும் ஒவ்வொருவரும் தமது சாதனைகளுக்குச் சாட்சியாக, ஊன்றாக, தெளிவான விளக்கமாக இருக்க வேண்டுமென்ற அறிவிப்பை ஆரம்பக் காலம் முதல் வழங்கி வருகிறார்.

64 நாயன்மார்களில் இறைவனைக் கல்லால் அடித்துப் பூசைசெய்த ஒரு நாயனார் 'கல்லடி நாயனார்' என்று பாராட்டப் படுகிறார். இந்த மரபை ஒட்டித்தான் நமது குருதேவர் இறைவனைச் சொல்லால் அடித்து இறைமையுணர்வை விழிச்சியும், எழுச்சியும், செழுச்சியும், மறுமலர்ச்சியும் பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.வை 'சொல்லடி நாயனார்' என்று சிறப்பித்திருக்கிறார். எனவே, இனிமேல் தமிழினம் காத்த பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை 'அறுபத்து நான்காவது நாயனாராகத் திருஅவதாரம் செய்த சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா.' என்றே குறிக்க வேண்டும். இதுவே, நாம் நமது குருதேவருக்கும், இந்துமதத்திற்கும் ஆற்றுகின்ற நன்றிக் கடன்.

ஏனெனில், நமது குருதேவர், '<u>இந்துமத வரலாறு என்னும் நெடுஞ்சாலையில் பெரியார் ஈ.வெ.ரா. ஓர் எல்லைக்கல் அல்ல; அவர் ஒரு வழிகாட்டி மரம்</u>' என்ற கருத்தையே தொடர்ந்து கூறி வருகிறார். இதன்படிப் பார்த்தால் இந்த நூற்றாண்டில் இந்து மத மறுமலர்ச்சி பற்றிய வரலாறும், முயற்சியும் பெரியார் ஈ.வெ.ரா. இல்லாமல் முழுமை பெறவே முடியாது! முடியாது! முடியாது! என்பதுதான் உண்மை. எனவே, "நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கௌரவத் தலைவராக அறிவிக்கப்படும் தகுதி பெரியார் ஈ.வெ.ரா. ஒருவருக்குத்தான் உண்டு" என்று நமது குருதேவரின் தந்தை கூறிய கருத்தையே நமது குருதேவரும் கூறுவதை நாமும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

எனவே,

வாழ்க பெரியார் ஈ.வெ.ரா!
வளர்க பெரியார் சிந்தனை!!
தொடர்க பெரியாரின் அறிவுப்பணி!!!

என்ற முழக்கங்களை நாமும் முழக்குவோமாகுக.

# செயல்திட்டம்

தமிழர்கள் அனைவரும் தங்களின் தன்மானம், இனம், மொழி, நாடு, உரிமைகள், ..... முதலிய அனைத்தையும் தள்ளாத வயதிலும் தளராமல் தன்னம்பிக்கையோடும், தன்னலமின்றியும் பாடுபட்டுக் காத்துக் கொடுத்த பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்த மாவீரன், சிந்தனைச் சிற்பி, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தியேயாக வேண்டும். இதற்காகக் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் முதல் கட்டமாகச் செயல்திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1. அருள்மிகு சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா. வார வழிபாட்டு மன்றங்கள் ஊர்தோறும் தொடங்கப் படல் வேண்டும்.

2. இம்மன்றத்தில் சமசுக்கிருத மொழி (மந்திரங்கள்) தோற்றுவிக்கப் படுவதற்குப் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய பைந்தமிழ் மந்திரங்களில் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும். இதனால், பெரியார் ஈ.வெ.ரா. கனவு கண்டது போல் கருவறைக்குள் அனைவரும் சென்று வழிபடல், கருவறையில் தமிழ்மொழி ஆட்சி பெறல், சாதி வேறுபாடின்றி அனைவரும் அருட்சினை செய்யும் குருக்கள்களாக மாறல் ..... முதலிய திட்டங்கள் செயலாகும்.

3. தமிழர்களின் தாழ்வு மனப்போக்குகள் மாறித் தன்னம்பிக்கை உணர்வும், தன்மான உணர்வும், இன உணர்வும், மொழி உணர்வும், நாட்டு உணர்வும் தழைத்துச் செழித்திடும். அதனால், தமிழன் பிறர் காலில் விழுதலும்; தமிழனைப் பிறர் சுரண்டுதலும் முழுமையாகத் தடுக்கப்படும்.

வாழ்க தந்தை பெரியார் ஈ.வெ.ரா.!

வளர்க பெரியார் நெறி!

வெல்க பெரியார் குறிக்கோள்!

<u>இந்த அஞ்சல் கட்டுரையை குருதேவரின் அருகில் இருந்து வரைந்தவர்கள்:</u>

1. அருள்மிகு
சோழப் பெருமண்டல அருளாட்சித் திருவோலக்க நாயகம்;
ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதீனம்;
பதினெண்சித்தர் குருவழி வாரிசு கொண்டருளு குரிசில்,
திருச்சி - 620012.

2. அருள்மிகு
திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம்;
உலகளந்த பெருமான் பெருந்தேவி சன்னிதானம்,
சென்னை - 600022.

3. அருள்மிகு
முக்கோண சத்தி பீடம்,
ஆத்தாள் பதினறு திருக்கரம் கொண்டருளு தேவி அகோர வீரபத்திரகாளி சன்னிதானம்,
மதுரை - 625001.

4. அருள்மிகு
தேவி கருமாரியம்மன் சன்னிதானம்;
சென்னை - 600099.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.

திருச்சி மாவட்டக் கரூர் அருகிலுள்ள முடிகணம் எனப்படும் முடிகண்ட சோழபுரத்தில் வாழ்ந்த அருட்பேரரசர் காக்கா வழியன் பண்ணையாடி மருதையா பிள்ளை அவர்கள் 'கரூர்ப் பெரும்புலவர்' என்ற பட்டத்துடன் கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை, மதுரை, ... முதலிய மாவட்டங்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவர் அரசவேடம் பூண்டு (தமிழினத்தின் உண்மையான அரச பாரம்பரியத்தில் தோன்றியவர்; அருளுலகில் சித்தர் காகபுசுண்டரின் வாரிசு) பாட்டுப் பாடிக் கூத்துக்களும், நாடகங்களும் 'புராண இதிகாச மறுப்பாக' நிகழ்த்தியவர். பிருமண வெறுப்பையும், மறுப்பையும் வித்திட்டு வளர்த்தவர்.

இவரது நெடிதுயர்ந்த தோற்றமும், செம்மேனியும், இனிய குரலும், தமிழ்ப் புலமையும், ஆரம்பப்பள்ளி ஆசிரியத் தொழிலும் (திண்ணைப் பள்ளிக்கூடம், தமது பண்ணையத்துக் குடிசையில் நடத்தினர்), கூத்தாடும் தொழிலும், சித்த மருத்துவத் திறமையும், சோதிட ஆற்றலும், தத்துவ நூல், தர்க்க சாத்திரம், கணுநூல், தொடுகுறி, அங்கவியல், மனையியல், வரியியல், நிமித்திகம், ... முதலியவற்றில் இவருக்கிருந்த திறமையும், .. இவரை நாடறிந்த 'பெரும்புலவர்', 'சித்தர்', 'காக்கையர்' என்று புகழ் பெறச் செய்தன. இவர், தனது செயல்நிலை வாரிசாகச் சுவாமி கைவல்யத்தை உருவாக்கி; இருவரும் இணைந்தே பெரும்பாலும் சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டிட்டனர்.

சுவாமி கைவல்யத்தின் பொறுப்பிலே கரூர்ச் சந்தையிலே வெல்லம் விற்பதும்; கரூர் வட்டாரத்தில் மிளகாய், எள், பருத்தி முதலியன வாங்கி ஈரோட்டுச் சந்தையிலே விற்பதும் பெரும்புலவர் காக்கையர் மருதையா பிள்ளையின் பொழுது போக்குகளில் ஒன்று. ஏனெனில், வணிகத்தாலோ, கூத்து நாடகத்தாலோ, மருத்துவத்தாலோ, பிற

கலைகளாலோ பொருளீட்டியவர் அல்ல முடிகணம் காக்கா வழியன் (காக்கையர் வழியினர் என்பதன் சுருக்கம்) பண்ணையாடி கரூர்ப் பெரும்புலவர் மருதையா பிள்ளை.

ஈரோட்டு வணிகத் தொழிலால் வெங்கட்ட நாயக்கரின் மண்டியில் வாடிக்கையாளர்களாக மாறிய மருதையா பிள்ளையும், அவரின் நண்பர் கைவல்ய சாமியாரும் (சுவாமி கைவல்யம் என்றே அனைவராலும் இவர் மரியாதையுடன் அழைக்கப் பட்டார்) தங்களது வேடிக்கைப் பேச்சால் வெங்கட்ட நாயக்கரின் குடும்ப நண்பரானார்கள். ஆண்டு தோறும் சோழியாயி கோயில் (கரூர்ச் சோழமாதேவி, நத்தமேடு சோழியாயி - இதுவே சோழப்பேரரசுகள் பிறப்பதற்குக் கருவாக இருந்த இடம். இதனால்தான் அருகிலுருவான சோழத் தலைநகர் கரூர் எனப் பெயர் பெற்றது) திருவிழாவுக்கு வெங்கட்ட நாயக்கர் குடும்பத்தார் வருவதும்; நன்கொடைகள் வழங்குவதும் ஈரோட்டுக் காவிரிக்கரையையும், கரூரின் அமராவதி ஆற்றங்கரையையும் இணைத்தது.

அதாவது வெங்கட்ட நாயக்கரின் இளைய மகன் பெயரில் ‘ஈ.வெ.இராமசாமி நாயக்கர் மண்டி’ என்ற வணிக நிலையம் ஈரோட்டில் புகழ் பெற ஆரம்பித்ததுடன்; கரூர்ப் பெரும்புலவர் மருதையா பிள்ளையும், அவரது தத்துவத் தயாரிப்பான சுவாமி கைவல்யமும் காவிரிக்கரை ஈ.வெ.இராமசாமியை அமராவதிக்கரைக்கு வரவழைத்துச் சித்தர் நெறிச் செல்வராகத் தயாரித்தனர். பெரும்பாலும் இருவரில் ஒருவர் ஈரோட்டில் தங்கி ஈ.வெ.இராமசாமியைத் தயாரிக்கலானார்கள்.

ஒரு திருமண விழாவில் ஈ.வெ.இராமசாமி உட்கார்ந்திருந்த பந்தியிலிருந்து பிருமணன் ஒருவன் அவரை எழுப்பிச் “சூத்திரன் உட்காரக் கூடாது. அது பிருமணர்க்குரிய பந்தி. வெளியே போய் உட்கார்... ...” என்று சொன்னவுடன் அருகிலிருந்த சுவாமி கைவல்யம் அந்தப் பிருமணனைக் கீழே தள்ளி அடியும் உதையும் கொடுத்தார். ஈ.வெ.இராமசாமி சண்டையை விலக்க கைவல்ய சாமியாரை வெளியே அழைத்து வந்து; “நாம் பிருமனாள் சாப்பிடற இடத்திலே உட்கார்ந்ததுதான் தவறு. நீங்க சாமியாரே இப்படி பிருமனாளை அடிக்கலாமா?” என்று கேட்டார். அப்பொழுதுதான் சுவாமி கைவல்யம்,

"... இராமசாமி!, உன் தந்தையோ, தாயோ, அந்தப் பிருமணன் சொன்னதை நல்ல வேளை கேட்கவில்லை. அவன் உன்னைத் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை வேலை செய்யப் பிறந்த கீழ்மகன் ... என்று திட்டினான். அது உனக்குப் புரியவில்லை. இல்லாவிட்டால், அந்தப் பிருமணன் உன்னைச் சூத்திரன் என்று சொல்லியவுடனே நீயே அவனைக் கொன்றிருப்பாய். பிச்சையெடுத்துப் பிழைக்கும் இந்தப் பிருமணன் உன்னைத் திட்டியதைக் கேட்டுக் கொண்டு சும்மாயிருந்தால் என்னை மருதையா பிள்ளை தயாரித்ததற்குப் பயனே இல்லாமல் போயிருக்கும் ..." என்று குமுறினார்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஈ.வெ.இராமசாமிக்குப் பிருமணர் 'சூத்திரர்' என்ற சொல்லால் அனைவரையும் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை ... என்பது புரிந்து பிருமணர் மேல் வெறுப்பு வளர்ந்தது. அந்த வெறுப்பைக் கரூர் அமராவதி ஆற்றங்கரையில் மருதையா பிள்ளையின் புலமையும், சுவாமி கைவல்யத்தின் தர்க்க சாத்திர அறிவும் உரமிட்டுக் களை பறித்து வளமாக வளர்த்தன. 'பிருமணரின் வேத மதத்தின் மாயைகளையும், பொய்களையும், ஆபாசங்களையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும் ஒழித்தால்தான் தமிழனின் மானம், மரியாதை, உரிமை, பெருமை, வாழ்வு, ... முதலிய அனைத்துமே பிழைக்கும், தழைக்கும் என்ற சித்தர் நெறியின் வாரிசாக ஈ.வெ.இராமசாமியைத் தயாரித்தவர்கள் காகபுசுண்டர் கரூர்ப் பெரும்புலவர் மருதையா பிள்ளையும் அவர் நண்பர் சுவாமி கைவல்யமுமேயாகும். எனவேதான், பொது வாழ்விலிருந்து ஒதுங்கி வாழும் நான், 'சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.' என்ற பேருண்மையை விளக்கி அவரை இ.ம.இ.யின் கௌரவத் தலைவராக ஏற்கப் பரிந்துரைக்கிறேன்.

**- காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர்**
**ம.பழனிச்சாமி பிள்ளை,**
**இ.ம.இ.யின் இரண்டாவது பாரம்பரியத் தலைவர்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: 1984ஆம் ஆண்டு வெளியாகிய குருதேவர் மாத இதழின் ஆண்டு மலர்//**

# பெரியார் ஈ.வெ.ரா. ஓர் ஆத்திகத் தலைவரே!

“சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் ஓர் ஆத்திகத் தலைவரே; மத மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட ஆன்மீக வாதியே; ஆரிய வருகையால் **உண்மையான இந்து மதம்** மடமைக்குரிய, மூடநம்பிக்கைக்குரிய, புரட்டுகளுக்குரிய, முதலாளித்துவத்திற்குரிய, சுரண்டலுக்குரிய, கேலிக்குரிய, கிண்டலுக்குரிய ..... ஒன்றாக மாறி விட்டது என்பதை விளக்கியுரைத்து; மக்களை ஒன்று திரட்டிய சீர்திருத்தவாதியே. சமசுக்கிருத ஆட்சியால் சமசுக்கிருதமே தேவமொழி என்று கூறியும் கூறாமலும் செயல்பட்டு வரும் வடஆரியர்களான பிராமணர்களின் திட்டமிட்ட சதியால்; தமிழர்கள் தன்னுரிமையை தன்னுடைய நாட்டிலேயே இழந்து, ஒற்றுமையின்றி, பிறருக்கு அடிமைகளாய், கூலிகளாய், கங்காணிகளாய் வாழ்கின்ற அவலக் கேவல நிலையை எடுத்துக் கூறிச் செயல்பட்ட சிந்தனை வாதியே” ......... என்ற அரிய பெரிய பேருண்மைகளை இந்நூலைப் படிக்கும் அனைவரும் உணர்வார்கள்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் கடவுளை மறுத்தார், வெறுத்தார், ஒதுக்கினார், தாக்கினார். எனவே, அவர் மத விரோதி, தமிழினத் துரோகி .... என்றெல்லாம் பலர் ஆராயாமல், சிந்திக்காமல் கூறி வருகின்றார்கள். ஆனால் அவருடைய பகுத்தறிவுமிகு செயல்களை நாம் சற்று ஆழமாக ஆராய்ந்து நோக்கினால்; மேலே இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் பெரியார் ஈ.வெ.ரா.வைப் பற்றிக் கூறிய கருத்துக்கள், வெளியிட்ட அறிவிப்புகள், கொடுத்த பட்டங்கள் யாவும் உண்மையே! ஏற்றுக் கொள்ளக் கூடியதே! என்பதை உணரலாம்.

ஆரம்பக் காலத்தில் தமிழகத்தில், மூன்று சதவீதமாக இருந்து வந்த பிறமண்ணினரான பிருமணர்களை மையமாக வைத்துத் தமிழர்கள் தங்களுக்கு 'பிருமணர் அல்லாதோர் சங்கம்' (Non-Brahmin Association) எனத் துவக்கியதைக் கண்டித்து பெரியார் ஈ.வெ.ரா. '<u>சுயமரியாதைச் சங்கம்</u>' என்ற ஒன்றைத் துவக்கி அதன் மூலம் தமிழனுக்குத் தன்மான உணர்வை ஊட்டினர்.

பெரியார் ஈ.வெ.ரா.தான்; **'தமிழர்களின் வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் பிறமண்ணினரான பிருமணர்கள் தலைமையேற்று வழிநடத்துவதால்தான் <u>தமிழினம் பார்ப்பானிடம் தலைகுனிந்து கிடக்கின்றது</u>. அவனைச் சுரண்டும்படி அனுமதிக்கின்றது'** - என்று துணிந்து கூறித் '**<u>தமிழர்கள் அனைவரும் அருளாளர்களாக, அருட்சகர்களாக, பூசாறிகளாக ...... மாற வேண்டும். அனைவரும் கோயிலின் கருவறைக்குள் செல்ல வேண்டும். தமிழன்தான் மதத் தலைமையை ஏற்க வேண்டும்</u>** ....' என்று கூறினர்.

பெரியார் ஈ.வெ.ரா.தான் ஆரியர்களின் கற்பனையால், பொருளற்ற சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளால் இந்து மதம் பலத்த கேலிக்கும், கிண்டலுக்கும், சுரண்டலுக்கும், மடமைக்கும், மற்ற சமுதாய நலக் கேடுகளுக்கும் உரியதொன்றாக மாறி விட்டது. <u>கோயில்கள், பிறமண்ணினரான பிருமணர்களின் கொட்டங்களுக்கும், கொள்ளைகளுக்கும் உரியதொன்றாக மாறி விட்டதால் பாழ்பட்டு விட்டது. அருளூறு அமுதத் தமிழை விட்டுவிட்டு செத்துப் போன சமசுக்கிருத மொழியில் மந்திரங்களைச் சொல்வதால் யாதொரு பயனுமில்லை</u>..... என விளக்கியதோடு மட்டுமல்லாமல், கோயில்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும், கோயில்களின் கணக்குகளைப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும், **<u>தமிழ் மொழியில்தான் அருட்சினை செய்ய வேண்டும்</u>** என்று வலியுறுத்தினர்.

ஆரியர்களால் மாசுபடுத்தப் பட்டுவிட்ட இந்துமதத்தை (அதாவது *ஹிந்துமதத்தை*) மட்டுமே பெரியார் தாக்கினர், கிண்டல் செய்தார்;

ஆரியர்களால் புனைந்துரைக்கப்பட்ட கட்டுக் கதைகள் நிரம்பிய புராண இதிகாசங்களை நகையாடினார் என்பதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!....... ஆனால் இங்கர்சாலும், மார்க்சும் அனைத்து மதங்களையும் தாக்கியது போல் இவர் அனைத்து மதங்களையும் தாக்க வில்லை. இது உண்மையான இந்துமதத்தின் மீது அவருக்கு இருந்த அளவற்றப் பற்றையும், பாசத்தையும் காட்டுகின்றது.

எனவேதான் பெரியார் ஈ.வெ.ரா. தமிழர்கள் தங்களுடைய உண்மை மதிப்பை உணர்ந்து வீறுகொண்டெழுந்து இந்துமத ஆலயங்களை சீரமைக்க வேண்டும்; மீண்டும் தமிழ் மொழியை எல்லா ஆலயங்களிலும் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்; தமிழ் முன்னோர்கள் செதுக்கி வைத்து விட்டுச் சென்றிருக்கும் சிலைகளை உடைக்காமல்; தானே 'பிள்ளையார்' சிலைகளைச் செய்து உடைத்தெறிந்தார். இந்நிகழ்ச்சியே அவரின் பத்தியுணர்வை வெளிப்படுத்துகின்றது.

பெரியார் இந்தி மொழியின் ஆட்சியை எதிர்த்ததால்தான் இந்தி மொழி வெறியர்களின் ஆட்சியிலிருந்து தமிழகத்தை முழுமையாக மீட்டுத் தர முடிந்தது. இந்த மாபெரும் பணியின் மூலம் 'தமிழன் ஒவ்வொருவனும் தன்னை - தன்னுடைய பாரம்பரியத்தை உணர வேண்டும்; பிறமண்ணினரான பிருமணர்களின் ஆதிக்கத்தை அறிய வேண்டும்; தலைவனில்லாமல் நாதியற்றுக் கிடக்கின்ற தமிழகத்தின் நிலையைப் புரிய வேண்டும்' என்று அறிவுறுத்தினார்.

அதனாலேயே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமையை ஏற்று வழி நடத்தி வரும் இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் பெரியார் ஈ.வெ.ரா. விட்டுச் சென்றுள்ள மாபெரும் போர்க்காலப் பணிகளை அணி திரட்டிச் செயல்பட அனைத்துத் தமிழக மக்களுக்கும் மேற்கூறிய சிந்தனைகளை வழங்கி வருகின்றார்.

பதினெண்சித்தர்கள் அருட்கொடையாக வழங்கிச் சென்றிருக்கும் தமிழ் மந்திரங்களை, அருட்கலைகளை, சமுதாய நெறிமுறைகளைக் கற்றுத் தேர்ந்து அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதன் மூலம்தான்; நாம் வாழ்க்கையில் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலிருந்தும் முழுமையாக வடஆரிய மாயைகளையும், ஏமாற்றுகளையும், தவறுகளையும், சூழ்ச்சிகளையும், அண்டப்புளுகுகளையும், ஆபாசக் கற்பனைகளையும், ஆகாசப் பொய்களையும், காட்டுமிராண்டித் தனங்களையும்.... அகற்றித் தன்மான உணர்வோடு செயல்பட முடியும்.

சமய - சமுதாய - அரசியல் - கலை - இலக்கிய - தொழில் துறைகள் அனைத்திலும் தமிழர்களும், தமிழ்மொழியும், தமிழுணர்வும் முதன்மை பெற்று, செல்வாக்கு பெற்று ஆட்சி பெறக் கூடிய நிலையை உருவாக்க; பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்குப் பின்னால் **இ**ந்து **ம**றுமலர்ச்சி **இ**யக்கம்தான் (**இ.ம.இ.**) பாடுபட்டு வருகின்றது. இந்த இயக்கத்தால்தான் இந்த நாட்டின் சமயத் துறையிலுள்ள கறைகள் மட்டுமல்லாது; சமுதாயத்திலுள்ள வறுமை, மிடிமை, இல்லாமை, இயலாமை, ஏக்கம், தேக்கம், வீக்கம், சுரண்டல், சாதிக்கொடுமைகள், தீண்டாமைகள், வேறுபாடுகள், மாறுபாடுகள், பகைமைகள்..... முதலிய அனைத்துக் குறைபாடுகளையும் முழுமையாக அகற்ற முடியும்.

ஏனெனில், பதினெண்சித்தர்கள் வகுத்துத் தந்துவிட்டுச் சென்றுள்ள 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைக்கும் வாக்குகளும், வாசகங்களும் இ.ம.இ.யிடம்தான் உள்ளன. இவற்றை முறையாகவும், முழுமையாகவும் செயல்படுத்தும் வண்ணமாகத்தான் இ.ம.இ.யின் கௌரவத் தலைவராகப் பெரியார் ஈ.வெ.ரா. ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளார்.

இனியாவது தமிழகத்தை முழுமையாக வடஆரியரான பார்ப்பனர்களின் பிடிகளிலிருந்தும்; நயவஞ்சகச் சூழ்ச்சி வலையிலிருந்தும் விடுவிக்கும் இம்மாபெரும் பணியில் தோளோடு தோளாக நின்று

போராட தமிழ் மொழி, இன, நாட்டுப் பற்றுளர்களும், இளைஞர்களும், திராவிடக் கழகத்தவரும், பகுத்தறிவாளர்களும், நாத்திகர்களும், ஆத்திகர்களும், அறிவாளர்களும் தங்களின் மேலான ஆதரவுகளை எல்லா வகையிலும் தருவார்களாகுக!

**அன்பு**

**இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1985இல் 'அருள்மிகு சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா.' என்ற தலைப்பில் அச்சிட்ட புத்தகம்//**

# <u>பெரியார் ஈ.வெ.ரா.வே கூறியுள்ளார் தான் நாத்திகர் அல்ல என்று.</u>

14-12-1947இல் திருவண்ணாமலை திராவிடர் கழக மாநாட்டில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பேசிய பேச்சிலிருந்து (சொற்பொழிவு) எடுக்கப்பட்ட வாசகம்.

"..... நீங்கள் கோயிலுக்குப் போங்கள்; வேண்டாமென்று கூறவில்லை. பத்திப் பரவசமாகி, ஆனந்தக் கூத்தாடுங்கள்; அதையும் வேண்டாமென்று கூறவில்லை.

ஆனால், அந்த அழுக்குப் பிடித்த பார்ப்பனனுக்கு ஏன் தலை வணங்குகிறீர்கள்? அவனை ஏன் தரகனாக்கிக் கொள்கிறீர்கள்? அவனுக்கு ஏன் உங்கள் காசை அள்ளி எறிகிறீர்கள்? அவன் மொழிக்கு ஏன் அடிமையாகுகிறீர்கள்? என்றுதானே உங்களை கேட்கிறோம்!

இதுவா நாத்திகம்? ..."

***(ஆதாரம்: 'உண்மை' மாதமிருமுறை ஏடு 1-6-1983 பக்கம் 5)***

# பெரியார் நாத்திகர் அல்ல என்பதற்கு மற்றும் ஓர் ஆதாரம்

"…. உன் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாயா? திராவிடனுக்கு எங்காவது குழவிக்கல் பொம்மை சாமியிருந்தது என்று எழுதப் பட்டிருக்கிறதா அதில்? அப்படித்தான் உனக்கு ஒரு சாமி வேண்டுமென்றால் அது உன்னைப் போல் அல்லவா இருக்க வேண்டும்? உன்னைத் தொட்டாலும், உன் நிழல் பட்டாலும் தான் செத்துப் போவதாகக் கூறுவதா உனக்கு சாமி? வெட்கமில்லையா உனக்கு?

கோயில் கட்டுவதும் நீ, கும்பாபிசேகம் செய்வதற்குப் பொருள் கொடுப்பதும் நீ. சாமியின் பூசைக்கும், சாப்பாட்டிற்கும் படியளப்பதும் நீ. அந்தச் சாமிக்கு தன்னைப் போல் உச்சிக்குடுமி வைத்து விட்டு தன்னைப் போல் பூணூலும் போட்டுவிட்டு நீ கொடுத்த துணியைத் தன்னைப் போல் பஞ்ச கச்சம் வைத்து அதற்கு உடுத்தி விட்டு அதன்மீது மாட்டு மூத்திரத்தைத் தெளித்து விட்டு 'சாமிக்கு உயிர் வந்துடுத்து, இனி எட்டி நில், தொடாதே' என்று உன்னிடம் கூறி விடுகிறானே பார்ப்பான்.

நீ அவனையும் தொடக் கூடாது, சாமியையும் தொடக் கூடாது. நீ அவன் சாப்பிடும் போதும் பார்க்கக் கூடாது, அந்தச் சாமி சாப்பிடும் போதும் பார்க்கக் கூடாது. ஆனால், இரண்டு பேருக்கும் நீ தானே படியளக்க வேண்டும்? இது யோக்கியமா? ஏமாற்றுதல் அல்லவா? என்று கேட்டால் இதற்கா நாத்திகம் என்று பெயர் கொடுப்பது? …. …. …

ஆகவே உங்களை யெல்லாம் சரியா? தப்பா? என்று பகுத்தறிவு கொண்டுதான் நடக்கும்படி சொல்லுகிறோம். இதற்கா நாங்கள் நாத்திகர்களாக்கப் படுவது? இதற்கா நாங்கள் நரகத்திற்குப் போக வேண்டும்? உண்மையான கடவுள் இருந்தால் அவர் பேரைச்

சொல்லி மக்களை வஞ்சித்து வரும் இந்தப் பார்ப்பனர்களை அன்றோ நரகத்திற்கு அனுப்பி விட்டு நமக்கு மகிழ்ச்சி செய்து அனுப்பி வைப்பார்?

இதைக் கேட்பதா நாத்திகம்? இந்த அக்கிரமங்களைக் கண்டு இரத்தம் துடிக்க வேண்டாமா உங்களுக்கு? எங்களை நாத்திகர்களென்று கூறும் இவர்கள் மட்டுமென்ன மகா பத்தர்களா? எவனாவது கடவுள் காப்பாற்றித் தருவார் என்று நினைத்துத் தன்னுடைய பணத்தை மேசை மீது வைத்து விட்டுப் போனாலும் அந்தப் பணம் அப்படியே இருக்குமே? கடவுள் காவல் இருக்கும்போது பணம் வைக்க இரும்புப் பெட்டி ஏன்? அதற்குப் பூட்டு ஏன்? அந்தக் கடவுளின் நகைகளுக்குத்தான் ஒரு பெட்டி ஏன்? அவரது கோயிலுக்குத்தான் ஒரு பூட்டு ஏன்? அவரையே ஜெயில் கைதி மாதிரி பூட்டி வைப்பதேன்? அப்படிப் பூட்டுப் போட்டும் கூட அவரைப் பெயர்த்து விட்டு அடியில் இருப்பதை அடித்துக் கொண்டு போவானேன்? கோயில் நகைகள் கொள்ளை போவதேன்?

அன்பர்களே! கோயிலும், கடவுளும், மதங்களும் பார்ப்பனர் தம் வாழ்வுக்காக வகுத்துக் கொண்ட வழிகள். அவை இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருக்க வேண்டுமென்றாலும் அறிவுக்கேற்ற ஒரு நாணயமான பாரபட்சமற்ற கடவுளை வணங்குங்கள். உங்களை இழிவுபடுத்தாத, முட்டாள்களாக்கி வைக்காத ஒரு மதத்தை தழுவி நடவுங்கள் என்றுதான் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**ஈ.வெ.ரா.**

***(திருவண்ணாமலை மாநாட்டுத் தலைமை உரை, 14-12-1947)***

**[ஆதாரம்: விடுதலை ஏடு புதன் 25.1.84, இதழ் 231, பக்கம் 2, முதல்பத்தி]**

# இந்து மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சி நிலை விளக்கம்

## குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அறிவிப்பு

# பெரியார் ஈ.வெ.ரா.வை கௌரவத் தலைவராக ஏற்றல்

## இ.ம.இயின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி அவர்களின் சில கருத்துக்கள்:

1. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெற்றுத் தர முடியாத உயர்ச்சியை இந்து மதத்துக்கு பெரியார் ஈ.வெ.ரா. ஈட்டித் தந்தார் என்பதை உணர முற்படுங்கள்.

2. பெரியார் ஈ.வெ.ரா.வின் வழியில் இந்துமத மறுமலர்ச்சிப் பணிகள் நிகழ்ந்தால்தான் மத மடமைகள், சுரண்டல்கள், ஆபாசங்கள், பயனற்றவைகள், தவறுகள் முதலியவை அகற்றப்படும். பின்னர்தான் பதினெண்சித்தர்கள் படைத்த “சித்தர் நெறி”யெனும் இந்து மதத்தின் பயன்கள் உலகுக்குத் தெரியும்.

3. “பதினெண்சித்தர்கள் படைத்த பகுத்தறிவு நிறை இந்துமதம் பார்ப்பனரால் பாழ்பட்டது” என்ற பேருண்மையைப் பறைசாற்றிய பெரியாரைப் புரிந்து செயல்படுவதுதான் தமிழ்மொழி, இன, பண்பாட்டு, நாகரீக விடுதலைகளை நல்கும்! நல்கும்!! நல்கும்!!!

4. பெரியார் ஈ.வெ.ரா.தான் “சமசுக்கிருத மொழி இந்து மத பத்தி நெறி, சத்தி நெறி, சித்தி நெறி, முத்தி நெறி ..... முதலிய அனைத்துக்கும் சாவுமணி அடித்து விட்டது” என்பதனைத் “தமிழ்மொழியில்தான் அருட்சினை செய்ய வேண்டும்” என்ற கருத்தால் தெளிவாக விளக்கினர்.

5. பெரியார், “உண்மையான இந்து மதத்தின் செழுச்சியால்தான் இன விடுதலைகள், மொழி விடுதலைகள், பண்பாட்டு உரிமைகள், பொதுவுடைமைகள் விளைந்திடும்” என்றதை ஆராய்ந்துணர முற்படுங்கள்.

தவத்திரு கைவல்ய சுவாமிகளும், அருள்மிகு கடலூர் ஞானியார் சுவாமிகளும், சித்தர் காகபுசுண்டரும், மறைமலை அடிகளாரும், மெய்வழிச்சாலை ஆண்டவரும், பரஞ்சோதி மகானும், பெரியகுளம் மௌனச் சாமியாரும், வடுக்கப்பட்டி தாத்தா சாமியாரும், திருவையாறு நிர்வாண அடிகளாரும், தஞ்சை வடவாற்றங்கரை மடத்தடிகளும், திருவண்ணாமலை பலாக்காக் காட்டு கோவணச் சாமியும், குன்றக்குடி அடிகளாரும் ...... இந்து மத மறுமலர்ச்சிப் பணிகளை பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார், ஈ.வெ.ரா.வால்தான் செய்ய முடியும் என்ற பேருண்மையை உணர்ந்து தங்களின் பேராதரவை வழங்கினுர்கள்.

மேற்கண்ட ஆய்வு முடிவுகளின் மேல் 1984 சூனில் கூடிய இ.ம.இ.யின் பொதுக்குழு பல பெரிய விவாதங்களை நிகழ்த்தியது. அதன்படி,

1. இயக்கத்திற்கு தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை கௌரவத் தலைவராக ஏற்றல்.

2. பெரியாரின் அடியொற்றி கருஞ்சட்டையில் சமுதாயப் பணிகளை நிகழ்த்த வேண்டும்.

3. குருதி வண்ணச் சிவப்பு உடையில் சமயப் பணிகளை ஆற்ற வேண்டும் எனத் தீர்மானித்தது.

இந்து மதத்தை ஈன்றெடுத்த தமிழினமே! தன்மானங் காத்த மாவீரர் பெரியாரைக் குருவாக ஏற்றிடு!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1985இல் வெளியாகிய ‘அருள்மிகு சொல்லடி நாயஞர் பெரியார் ஈ.வெ.ரா.’ என்ற புத்தகம்.//**

# பெரியார் ஈ.வெ.ரா. ஆதிசங்கரரின் மறு அவதாரமே!

"…. நண்பா! நமது இயக்கம் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வருகின்ற ஒன்று. எனவேதான், இந்த இயக்கத்தால் தன்னலங் கருதாது இறுதி வரை தளராது பாடுபட்ட தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் நாத்திகக் கருத்துக்களை மிகுதியாகப் பேசிச் செயல்பட்டிட்ட போதும்; அவர் ஓர் ஆத்திகத் தலைவரே என்ற பேருண்மையை நிலைநாட்ட முடிந்தது. அதாவது, கி.பி. 6ஆம் (ஆறு) நூற்றுண்டின் இறுதி, அல்லது 7ஆம் (ஏழு) நூற்றுண்டின் முற்பகுதிக் காலத்தில் வாழ்ந்த ஆதிசங்கரர் புத்த மதத்துக்கும், சமண மதத்துக்கும் பதில் தருகிற வண்ணம் 'மனீசாப் பஞ்சகம்' என்ற பெயரில் ஐந்து சுலோகங்களைக் கொண்ட ஒரு நூலை எழுதித் தமது பணியை நிறைவு செய்தார். இந்த 'மனீசாப் பஞ்சகம்' நூலில் ஆதிசங்கரர்:-

1. கடவுளை எதிர்ப்பது,
2. கடவுள் இல்லை என்று மறுப்பது,
3. மதச் சின்னங்களை அணிவது தவறு என்பது,
4. உருவ வணக்கம் தவறு என்பது,
5. சாதிகளை எதிர்ப்பது.

… எனப்படும் ஐந்து கொள்கைகளை விளக்கியுரைத்து நிலைநாட்டியிருக்கிறார். இதே கருத்துக்களை விளக்குவதிலும், செயலாக்குவதிலும்தான் பைந்தமிழர் நலப் பாதுகாப்புப் போர்ப் பாசறையும், பகுத்தறிவுப் பகலவனுமான வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ.வெ.ரா. தம் வாழ்வைச் செலவிட்டார். எனவேதான், இவரை ஓர் ஆத்திகத் தலைவர் என்று ஒப்புக் கொண்டோம் யாம். அதற்கு அடையாளமாகப் பெரியார் ஈ.வெ.ரா.வை அறுபத்து

நான்காவது (64) நாயனாராகத் திருஅவதாரம் செய்திருக்கும் ‘சொல்லடி நாயனார்’ என்று அறிவிப்புச் செய்துள்ளோம். இதன் அடிப்படையில்தான், “... உடனடியாக எல்லாப் பத்தர்களும் இவருடைய படத்தைத் தங்களின் பூசையறைகளில் வழிபாட்டுக்குரியதாக ஆக்கிடல் வேண்டும். அடுத்து எல்லாக் கோயில்களிலும் அறுபத்து மூவர் சிலைகளின் வரிசையில் தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.வின் சிலையை 64வது நாயனார் சிலையாக நிறுவிப் பூசைகளைச் செய்ய வேண்டும். இனிமேல், ‘அறுபத்து மூவர் விழா’ என்ற பெயரில் கொண்டாடப் படும் விழாவை ‘<u>அறுபத்து நால்வர் விழா</u>’ என்ற பெயரில்தான் கொண்டாடல் வேண்டும்” என்ற அறிவிப்புக்களையும் தொடர்ந்து வழங்குகிறோம் யாம். இதன்படி, நமது இயக்கத்தவர் ஆங்காங்கே ‘சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா.’வின் பெயரால்

1) வார வழிபாட்டு மன்றம்,
2) சமுதாயச் சீர்திருத்த மன்றம்,
3) பகுத்தறிவு வளர்ச்சி மன்றம்,
4) மதச் சீர்திருத்த மன்றம்,
5) தமிழ் இலக்கிய மன்றம்,
6) கலை வளர்ச்சி மன்றம்,
7) சொற் பயிற்சி மன்றம்

- என்று பல மன்றங்களை உருவாக்கிச் செயல்படுகிறார்கள். தாங்களும் இதன்படியே செயல்படல் வேண்டும்.

**<u>சிறப்புக் குறிப்பு:-</u>**

“ஆதிசங்கரர் ‘மனீசாப் பஞ்சகம்’ என்ற நூலின் மூலம் வழங்கிய கருத்துக்களையே; பெரியார் ஈ.வெ.ரா.வாக மறு பிறப்பெடுத்துச் செயலாக்கினார்” - என்ற கருத்தே! இன்றைக்கு மலைமுகடு முதல் அலைகடலிடைத் தீவு வரை வாழும் அருளாளர்களின் கருத்தாக இருக்கிறது. எனவேதான், **<u>‘பெரியார் ஈ.வெ.ரா. ஆதிசங்கரரின்</u>**

**<u>மறு அவதாரமே’</u>** என்ற தலைப்பில், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் என்ற முறையில் அருளுலக அறிவிப்புகளையும் வழங்கி வருகிறோம் யாம். ஆனால் நாத்திகத் தலைவரை ஆத்திகத் தலைவரின் மறு அவதாரமாகக் கூறுவதை எல்லோராலும் புரிந்து விரும்பி ஏற்க முடியவில்லை. ஆனால், யாம், குருதேவர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், அரசயோகி, ஞானகுரு, இராசிவட்ட நிறைவுடையார் .... என்று இம்மண்ணுலகில் இதுகாறும் எவருமே பெற்றிராத அருட்பட்டங்களைப் பெற்றிருந்தும்; M.A., (Ph.D.) வரை படித்திருந்தும்; ஒரு மாபெரும் புரட்சிச் சிங்கத்தால் வளர்க்கப் பட்டிருந்தும்; உலக மத ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்தும் ...... உலக அருளாளர்களின் கருத்தை வெளியிடத் தயங்குதலோ! மயங்குதலோ! கலங்குதலோ! பின் வாங்குதலோ! .... தவறாகும். எனவே, தங்களைப் போன்ற இந்து மத மறுமலர்ச்சிப் பணி ஆர்வலர்கள் எமது அறிவிப்புக்களைச் சிந்தித்துப் புரிந்து, தெளிந்து உலகுக்கு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையே இறுதியாக விடுக்கிறோம் யாம் ......”

**- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப் பட்ட கருத்து.**

**//உண்மை நகல்//**

**//இதன் ஆதாரம்: 1985இல் அச்சிடப் பட்ட ‘அருள்மிகு சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா.’ என்ற புத்தகம்.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** **தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*** ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார். இவரே **'பிருமணச் சிசு கூடத் தமிழகத்தில் இருக்கக் கூடாது'** என்றும்; **'சமசுக்கிருத ஒலி கூட தமிழகத்தில் கேட்கக் கூடாது'** என்றும்; மிகமிகக் கடுமையான கொடுமையினை உருவாக்கி; முடிவில் இராசராச சோழனுக்கு சாபம் கொடுத்து அவன் தற்கொலை செய்து கொள்ளவும் காரணமாக இருந்திட்டார்.



இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com